අයිතිය උදෙසා මාධ්‍යවේදියෝ
உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்
JOURNALISTS FOR RIGHTS

No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

## ஊடக அறிக்கை

திகதி: 2026 அக்டோபர் 26

ஜனநாயக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் PSTA மற்றும் POCA சட்டமூலங்களைத் திருத்துங்கள்! சுதந்திர ஊடகங்களை ஒடுக்குவதற்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைச் சுருக்குவதற்கும் எதிராக அணிதிரள்வோம்!

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம் (Protection of the State from Terrorism Bill – PSTA) மற்றும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான சட்டமூலம் (Prevention of Organised Crimes Bill – POCA) ஆகியவற்றின் மூலம் இலங்கையில் ஊடகச் சுதந்திரம், புலனாய்வு ஊடகவியல், தகவல் அறியும் உரிமை மற்றும் ஜனநாயகப் பொறுப்புக்கூறல் ஆகியவை பாரிய ஆபத்துக்கு உள்ளாகக்கூடும் என ‘உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்’ (Journalists for Rights) வலியுறுத்துகின்றனர்.

பயங்கரவாதம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்குவது ஒரு அரசின் சட்டபூர்வமான பொறுப்பாகும். எனினும், அதற்காக உருவாக்கப்படும் சட்டங்கள், பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஊடக மூலங்களின் இரகசியத்தன்மை, அமைதியான போராட்டங்களைச் செய்தியாகப் பதிவு செய்வதற்கான உரிமை மற்றும் நியாயமான விசாரணையைப் பெறுவதற்கான உரிமை ஆகியவற்றைத் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தக்கூடாது.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) தன்னிச்சையான கைதுகள் மற்றும் நீண்டகாலத் தடுப்புக்காவல் தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது. அச்சட்டத்திற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படும் புதிய சட்டங்களும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகச் சுதந்திரங்களுக்கு இணக்கமானதாக இருக்க வேண்டும். பழைய சட்டத்தில் காணப்பட்ட பிரச்சினைகள் புதிய சட்டங்கள் மூலம் மீண்டும் உருவாகவோ அல்லது மேலும் விரிவடையவோ அனுமதிக்கக்கூடாது.

PSTA மற்றும் POCA சட்டமூலங்களின் தொடர்புடைய ஏற்பாடுகள் குறித்து எமது கவனம் பின்வரும் முக்கிய பிரச்சினைகள் மீது செலுத்தப்படுகிறது:

### புலனாய்வு ஊடகவியல் மற்றும் பொதுமக்களின் போராட்டங்களைப் பதிவு செய்வதற்கான சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்கள்

PSTA சட்டமூலத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கத்தின் வரம்பு மற்றும் 9 மற்றும் 10ஆம் பிரிவுகளின் கீழ் பயங்கரவாதம் தொடர்பான வெளிப்பாடுகள் குறித்த ஏற்பாடுகள் தொடர்பாகக் கடுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

பயங்கரவாதம் தொடர்பான வரைவிலக்கணங்கள் விரிவானதாகவோ தெளிவற்றதாகவோ இருக்கும்போது, அவற்றைப் பல்வேறு விதங்களில் விளக்குவதற்கான அபாயம் காணப்படுகிறது. இத்தகைய சூழலில், அரசாங்கத்தின் செயற்பாடுகள், ஊழல், முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களைப் பொதுநலன் கருதி வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் அபாயம் ஏற்படலாம். பயங்கரவாதம் தொடர்பான இத்தகைய தெளிவற்றதும் அளவுக்கு அதிகமாக விரிவுபடுத்தப்பட்டதுமான வரைவிலக்கணத்தினால் உருவாகும் அடக்குமுறைச் சூழல், சட்டமூலம் முழுவதும் பரவி, சுதந்திரமான ஜனநாயக வெளிக்குத் அச்சுறுத்தலாக அமைகிறது.

அதேபோன்று, பொதுமக்களின் போராட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களைச் செய்தியாகப் பதிவு செய்யும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக, அரச உத்தியோகத்தர் ஒருவரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற குற்றங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய குற்றம் POCA சட்டமூலத்தின் முதலாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருப்பது, தொடர்புடைய சட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பங்களில், விசேட விசாரணை மற்றும் தடுப்புக்காவல் அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான கவலைகளை எழுப்புகிறது.

ஊடகவியலாளர் ஒருவர் தனது கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்படுவதால் மாத்திரம், அவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயலில் ஈடுபட்ட ஒருவராகிவிட மாட்டார். எனினும், சட்ட வரைவிலக்கணங்களும் அதிகாரங்களும் விரிவான வகையில் அமைக்கப்படும்போது, அவை தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயத்தைத் தடுப்பதற்குத் தெளிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமாகும்.

## ஊடக மூலங்களின் இரகசியத்தன்மை மற்றும் டிஜிட்டல் தனியுரிமை

புலனாய்வு ஊடகவியலின் அடிப்படையே தகவல் வழங்குவோரின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதாகும். அரச ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை வெளிக்கொணர முன்வரும் தகவல் வழங்குவோரின் அடையாளங்கள் பாதுகாப்பற்றதாக இருந்தால், அவர்கள் தகவல்களை வழங்கத் தயங்கக்கூடும். இதன் மூலம், உண்மையான தகவல்களை அறிந்துகொள்வதற்கான பொதுமக்களின் வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்படும்.

PSTA சட்டமூலத்தின் 8 மற்றும் 15ஆம் பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அறிக்கையிடல் கடமைகள் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் விளைவுகள், ஊடகவியலாளர்களின் தொழில்சார் இரகசியத்தன்மையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைக் கருத்திற்கொண்டு மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

POCA சட்டமூலத்தின் 28, 44 மற்றும் 45ஆம் பிரிவுகள் தொடர்பிலும் கடுமையான கவலைகள் நிலவுகின்றன. தகவல் தொடர்புகளை இரகசியமாக ஒட்டுக்கேட்டல், தொலைபேசி பதிவுகள்

ඇයිතිය උදෙසා මාධ්‍යවේදීහු
உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்
JOURNALISTS FOR RIGHTS

No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

மற்றும் இருப்பிடத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல், மறைகுறியாக்கப்பட்ட டிஜிட்டல் சாதனங்களை அணுகுமாறு கட்டாயப்படுத்துதல் போன்ற அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, நீதித்துறை மேற்பார்வை, அவசியம், விகிதாசாரத் தன்மை மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான உத்தரவாதங்கள் இருக்க வேண்டும்.

இத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஊடகவியலாளர்களின் தகவல் தொடர்புகள் மற்றும் தகவல் மூலங்களின் அடையாளங்கள் வெளிப்படுத்தப்படுமானால், அது தனிநபர் ஒருவரின் தனியுரிமையை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த புலனாய்வு ஊடகவியலையும் பாதிக்கும். எனவே, இந்த ஏற்பாடுகளின் கீழ் பெறப்பட வேண்டிய நீதிமன்ற அனுமதி, அதிகாரங்களைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் அவற்றின் முறைகேடான பயன்பாட்டைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

## களச் செய்தி சேகரிப்பு, புகைப்படம் எடுத்தல் மற்றும் அரச தகவல்களை அணுகுதல்

PSTA சட்டமூலத்தில் சோதனையிடுதல், கைது செய்தல், உபகரணங்களைக் கைப்பற்றுதல் மற்றும் இடங்களுக்குத் தடைவிதித்தல் தொடர்பான ஏற்பாடுகள், ஊடகவியலாளர்களின் களச் செய்தி சேகரிப்பில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைக் கருத்திற்கொண்டு மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

பொதுமக்களின் போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை ஊடகவியலாளர்கள் செய்தியாகப் பதிவு செய்யும் திறன், ஒரு ஜனநாயகச் சமூகத்தின் அத்தியாவசியமான அம்சமாகும். இத்தகைய செய்தி சேகரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் கமராக்கள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணினிகளைச் சோதனையிடுவதற்கும் கைப்பற்றுவதற்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் தெளிவான சட்ட வரம்புகள் இருக்க வேண்டும்.

அத்துடன், PSTA சட்டமூலத்தின் 61ஆம் பிரிவின் கீழ் இடங்களுக்குத் தடைவிதிக்கும் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதமும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். தேசியப் பாதுகாப்பிற்கான உண்மையான தேவை நிலவும் சந்தர்ப்பங்களில்கூட, இத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைப் பதிவு செய்து வெளியிடுவதைத் தேவையற்ற வகையில் தடுக்க முடியாத நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

POCA சட்டமூலத்தின் 14ஆம் பிரிவின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பொதுவெளியில் வெளியிடுவது தொடர்பிலும் தெளிவான வரம்புகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவசியமாகும். நீதிமன்றச் செயற்பாடுகளின் நியாயத்தன்மையைப்

No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

பாதுகாக்கும் நோக்கில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து அறிந்துகொள்வதற்கான பொதுமக்களின் நியாயமான உரிமையைத் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தக்கூடாது.

## ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விரிவான வரைவிலக்கணமும் ஊடகக் குழுக்களுக்கு ஏற்படும் அபாயங்களும்

POCA சட்டமூலத்தின் 3 மற்றும் 66ஆம் பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான வரைவிலக்கணம் மற்றும் 4(2)ஆம் பிரிவுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு தெளிவான சட்ட வரம்புகள் அவசியமாகும்.

குறிப்பாக, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இணைந்து ஒரு குற்றத்தைச் செய்யும் சந்தர்ப்பங்களில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்டத்தைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை வரையறுக்கும்போது, அந்தக் குழுவின் தன்மை, நோக்கம் மற்றும் தொடர்புடைய குற்றத்தின் சட்டரீதியான கூறுகள் ஆகியவை துல்லியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு செய்தி ஆசிரியர், செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளர் ஆகியோர் தொழில்சார் பணிக்காக இணைந்து செயற்படுவதையோ அல்லது சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று இணைந்து தகவல்களைப் பகிரங்கப்படுத்துவதையோ மாத்திரம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயலில் ஈடுபடுவதாகப் பொருள்கொள்ளக் கூடாது.

எனினும், POCA சட்டமூலத்தின் முதலாம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றங்களின் வரம்பும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான வரைவிலக்கணமும் இணைந்து எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது குறித்த தெளிவான வரம்புகள் இல்லாவிட்டால், ஊடகக் குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் தொடர்பில் தேவையற்ற சட்டரீதியான அபாயங்கள் ஏற்படக்கூடும். இங்கு குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டியவை:

- நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தின் (Online Safety Act – OSA) கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சில குற்றங்கள் POCA சட்டமூலத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள்;
- பதிப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை தொடர்பான குற்றங்களை முதலாம் அட்டவணையில் உள்ளடக்குவதால் ஏற்படும் தாக்கங்கள்;
- அமைதியான போராட்டங்கள், தொழிற்சங்கச் செயற்பாடுகள் மற்றும் ஊடகச் செய்தியறிக்கையிடல் தொடர்பான குற்றங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவதற்கான அபாயம்.

ஒப்பீட்டளவில் குறைந்த தீவிரத்தன்மை கொண்ட குற்றமாக இருந்தாலும், அதனை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமாகக் கருதி விசேட விசாரணை அல்லது தடுப்புக்காவல்

අයිතිය උදෙසා මාධ්‍යවේදියෝ
உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்
JOURNALISTS FOR RIGHTS
No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருந்தால், அத்தகைய அதிகாரங்களின் வரம்பு மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான தெளிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் சட்டத்தில் வகுக்கப்பட வேண்டும்.

## நிறைவேற்று அதிகாரத்தின் கீழான தடுப்புக்காவல் உத்தரவுகள், பிணை, சட்டத்தரணியின் உதவியைப் பெறுதல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள்.

தனிநபர் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் போது நீதித்துறை மேற்பார்வையும் நியாயமான விசாரணையைப் பெறுவதற்கான உரிமையும் அத்தியாவசியமானவை. PSTA சட்டமூலத்தைப் போலவே, POCA சட்டமூலத்தின் 20–25ஆம் பிரிவுகளில் தடுப்புக்காவல் உத்தரவுகள், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துதல் மற்றும் பிணை வழங்குதல் தொடர்பாக உள்ள ஏற்பாடுகளும் நீதித்துறையின் சுதந்திரத்தையும் சந்தேகநபர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரிகளுக்கு தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரங்களை வழங்குவதும், அத்தகைய உத்தரவுகள் தொடர்பில் நீதவான்களுக்கு உள்ள விருப்புரிமையைக் கட்டுப்படுத்துவதும், தனிநபர் சுதந்திரம் மற்றும் நீதித்துறை மேற்பார்வை தொடர்பாகக் கடுமையான கேள்விகளை எழுப்புகின்றன.

அதேவேளை, POCA சட்டமூலத்தின் 47ஆம் பிரிவின் கீழ், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவிநிலையிலுள்ள அதிகாரி முன்னிலையில் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள், வற்புறுத்தலின் மூலம் வாக்குமூலங்கள் பெறப்படும் அபாயத்தையும் நியாயமான விசாரணையைப் பெறுவதற்கான உரிமையையும் கருத்திற்கொண்டு மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

இத்தகைய சட்டங்களை உருவாக்கும்போது, சட்டத்தரணியின் உதவியைப் பெறுவதற்கான உரிமை, கைது சட்டபூர்வமானதா என்பதை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பு மற்றும் குற்றமற்றவர் என்ற முன்கணிப்பைப் பாதுகாத்தல் ஆகியவை அத்தியாவசியமானவையாகும்.

ஊடக நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் தொடர்பில் பொறுப்பைச் சுமத்தும் சட்ட ஏற்பாடுகளும், தனிப்பட்ட குற்றப்பொறுப்பு, அறிவு மற்றும் பொறுப்புடைமை தொடர்பான நியாயமான சட்டக் கோட்பாடுகளுக்கு இணங்க இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், ஊடக நிறுவனங்கள் தேவையற்ற சுய தணிக்கையில் ஈடுபடும் அபாயம் காணப்படுகிறது.

No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

## எமது நிலைப்பாடும் கோரிக்கைகளும்

PSTA மற்றும் POCA சட்டமூலங்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், அவற்றின் வரம்பு மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தைப் பொறுத்து, அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடும்.

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்குவதும், ஊடகங்களை மௌனமாக்குவதற்கோ, தகவல் அறியும் உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது நீதித்துறை மேற்பார்வையின்றி நிறைவேற்று அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்கோ அனுமதியளிப்பதில்லை. எனவே, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்திடம் பின்வரும் நடவடிக்கைகளை நாம் கோருகிறோம்:

1. அடிப்படை உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் சட்ட ஏற்பாடுகளை நீக்குதல் அல்லது திருத்துதல்: PSTA மற்றும் POCA சட்டமூலங்களில் பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், தனிநபர் சுதந்திரம், நியாயமான விசாரணையைப் பெறுவதற்கான உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை ஆகியவற்றைத் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை மீளாய்வு செய்து, அவற்றை நீக்குவதற்கோ அல்லது அடிப்படையில் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. ஊடகத் தகவல் மூலங்களின் இரகசியத்தன்மை மற்றும் டிஜிட்டல் தனியுரிமையைப் பாதுகாத்தல்: POCA சட்டமூலத்தின் 28, 44 மற்றும் 45ஆம் பிரிவுகளின் கீழ் தகவல் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல், மறைகுறியாக்கப்பட்ட சாதனங்களை அணுகுதல் தொடர்பான அதிகாரங்களுக்கு தெளிவான சட்ட வரம்புகள், நீதித்துறை மேற்பார்வை மற்றும் முறைகேடான பயன்பாட்டைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டும். அத்துடன், PSTA சட்டமூலத்தின் 8 மற்றும் 15ஆம் பிரிவுகள் ஊடகத் தகவல் மூலங்களின் இரகசியத்தன்மையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களையும் மீளாய்வு செய்ய வேண்டும்.
3. ஊடகக் குழுக்கள் மற்றும் அமைதியான குடிமைச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்டத்தின் முறைகேடான பயன்பாட்டிலிருந்து பாதுகாக்கப்படுதல்: POCA சட்டமூலத்தின் 3, 4(2) மற்றும் 66ஆம் பிரிவுகளைத் திருத்தி, ஊடக நிறுவனங்கள், ஆசிரியர் குழுக்கள், தொழிற்சங்கங்கள், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் சட்டபூர்வமான செயற்பாடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு, அவற்றை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களாகக் கருத முடியாத வகையில் தெளிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டும். OSA சட்டத்தின் கீழான குற்றங்கள், பதிப்புரிமை தொடர்பான குற்றங்கள் மற்றும் அமைதியான போராட்டங்கள் தொடர்பான குற்றங்கள் POCA சட்டத்தின் கீழ் எவ்வாறு பயன்படுத்தப்படலாம்

අයිතිය උදෙසා මාධ්‍යවේදීයෝ
உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்
JOURNALISTS FOR RIGHTS
No. 288/135, Jayawardane Gardens,
Baseline Road, Colombo 09.
Tel/ Fax: 0112 669100

என்பதையும் மீளாய்வு செய்து, சட்டத்தின் வரம்பு தேவையற்ற வகையில் விரிவடைவதைத் தடுக்க வேண்டும்.

4. ஜனநாயக ஊடகச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் (OSA) உள்ளிட்ட ஊடகச் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் பாதிக்கும் சட்டங்களை மீளாய்வு செய்யும்போது, ஊடக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் அர்த்தமுள்ள பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும்.
5. ஜனநாயக ஊடகச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் (OSA) உள்ளிட்ட ஊடகச் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் பாதிக்கும் சட்டங்களை மீளாய்வு செய்யும்போது, ஊடக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் அர்த்தமுள்ள பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும்.
6. இந்தச் சட்டமூலங்களின் அரசியலமைப்புச் சட்டப்பூர்வத் தன்மை குறித்து உயர் நீதிமன்றம் தீர்மானித்திருந்தாலும், நாம் முன்வைக்கும் இந்தக் கடுமையான பிரச்சினைகள், சட்டமூலங்களின் அரசியலமைப்புச் சட்டப்பூர்வத் தன்மையைத் தாண்டி, ஜனநாயக வெளி தொடர்ந்து நிலைத்திருப்பது தொடர்பான அடிப்படைப் பிரச்சினையாகும் என்பதே எமது நிலைப்பாடு என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்துகிறோம்.

சுதந்திரமான ஊடகம் என்பது ஜனநாயகத்தின் அத்தியாவசியமான முன்நிபந்தனையாகும்.

ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்பது ஊடகவியலாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமல்ல. அது மக்களின் தகவல் அறியும் உரிமையையும், அரச அதிகாரத்தின் மீதான பொதுமக்களின் கண்காணிப்பையும், ஜனநாயகப் பொறுப்புக்கூறலையும் பாதுகாப்பதாகும்.

எனவே, PSTA மற்றும் POCA சட்டமூலங்களில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகச் சுதந்திரங்களைப் பாதிக்கக்கூடிய ஏற்பாடுகளை மீளாய்வு செய்து, அவை சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கும் இலங்கை அரசியலமைப்புக்கும் இணங்கும் வகையில் திருத்தியமைக்குமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம்.

சுதந்திரமான ஊடகம், தகவல் அறியும் உரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக அணிதிரள்வோம்!
நிறைவேற்றுக் குழு
**உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள் (Journalists for Rights)**